Judicial Form No.53
( See Rule 42 )

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**

**Case No. CC. No. 136/2024**

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புவனேஷ்வரி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சீனிவாசன் | தொழில் | ஆசிரியர் |
| கிராமம் | ஆலங்காயம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 23rd day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>   எதிரி ஆஜர்**

நான் தற்போது ஆலங்காயம் அரசு தொடக்கப்பள்ளியல் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி நான் பணிபுரிந்த பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி செய்தார். எனவே அவரை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் என்னுடைய பள்ளியில் இரண்டாம் பருவத்திற்கான எண்ணும் எழுத்தும் புத்தாக்க பயிற்சிக்கு நான் சென்றிருந்தேன். நான் அந்த பயிற்சியில் 05.10.2023 முதல் 06.10.2023 வரை கலந்து கொண்டேன். சாட்சி தான் அந்த பயிற்சியில் கலந்து கொண்டதற்கான அந்த பயிற்சியின் மேற்பார்வையாளர் வழங்கிய வருகை சான்றின் அசலை கொண்டு வந்திருந்தார். நான் பயிற்சி முடிந்து பள்ளிக்கு வந்தபோது பள்ளி வளாகத்தில் இருந்த தேக்கு மரங்களை வெட்டிவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். அந்த மரங்களை யார்

வெட்டினார்கள், என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு பள்ளி வளாகத்தில் 18 மரங்கள் வெட்டப்பட்டதாக எண் வழங்கியிருந்தார்கள். அதில் சில மரங்கள் ஏற்கனவே பட்டுபோய் இருந்தது. அந்த பட்டு போன மரங்கள் மாணவர்களின் மேல் ஏற்கனவே விழுந்துள்ளது. இப்போதும், அவ்வாறு விழும் நிலையில் ஒரு மரம் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிக்கு பிறகு நான்தான் அந்த பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியராக இருந்தேன். அப்போது போலீசார் பள்ளிக்கு வந்து விசாரித்து சென்றார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

மரங்கள் ஏற்கனவே பட்டுபோய் இருந்த நிலையில் ஆஜர் எதிரி அவற்றை வெட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் அதற்காக வனத்துறை உள்ளிட்ட பல துறைகளுக்கு கடிதம் எழுதி வந்தார். ஆஜர் எதிரிதான் அந்த மரங்களை ஆள் வைத்து வெட்டி விற்று பணமாக்கியுள்ளார் என்றால் சரியல்ல. யார் அவ்வாறு வெட்டியது என்றே எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி என்னுடைய பள்ளி தலைமை ஆசிரியர் என்பதால் அவருக்கெதிராக நான் சாட்சியம் அளிக்க தயங்குகிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் மர்ம நபர்கள் வெட்டியதாக மட்டும் தான் கூறியுள்ளேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தான் பொறுப்பு தலைமை ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். முதல் பருவத்தேர்வு முடிந்தபின் எந்த தேதியில் இருந்த எந்த தேதி வரை பள்ளிக்கு விடுமுறை என்றால் 28.09.2023 லிருந்து 8 நாட்கள் தொடர் விடுமுறை. அந்த விடுமுறை நாட்களில் தான் எண்ணும் எழுத்தும் புத்தாக்க பயிற்சிக்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த பயிற்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆலங்கயாத்தில் நடைபெற்றது. 05.10.2023 , 06.10.2023 ஆகிய இரு நாட்கள் பயிற்சி நடைபெற்றது என்றால் சரிதான். நான் பள்ளி விடுமுறை கழிந்து தான் நான் பள்ளிக்கு திரும்பினேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எவ்வளவு நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் 4,5 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எந்த போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஆலங்காயம் காவல் நிலையத்தில் இருந்த வந்து

விசாரித்தார்கள். எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் யார் புகாரளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரைணயில் கூறிய விவரத்தை தான் போலீசார் என்னை விசாரணை செய்யும் போது கூறினேன் என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்